3. தகவல் கோரல்

(அ) ஜல்லிக்கட்டு தடையை நீக்கக்கோரி போராட்டம், காவல் துறை நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். ஆளுநர் உரையின்மீது பேசும்போது, பேசுகிறவர்கள் அதைப்பற்றிப் பேசலாமே! (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23 ஆம் தேதி சென்னையிலே* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் தேவையில்லாதது. நீங்கள் அப்படியெல்லாம் பேசமுடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் நடைபெற்ற நிகழ்ச்சியை வேண்டுமானால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர்தானே பேசிக் கொண்டிருக்கிறார்? (குறுக்கீடுகள்) உங்கள் தலைவரிடம்தானே நான் பேசிக் கொண்டிருக்கிறேன்! (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து சென்னையிலே* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நடந்த நிகழ்ச்சியைச் சொல்லுங்கள். விரிவாக உள்ளே போகாதீர்கள். அதை நான் அனுமதிக்க முடியாது. நடந்த நிகழ்ச்சிக்கு என்ன பதில் என்று கேளுங்கள். அரசிடம் பதில் பெறலாம். நீங்கள் மேற்கொண்டு அதில் உள்ளேபோய் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, அதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திட வேண்டும். அதற்காகத்தான் இந்தக் கோரிக்கையை நான் எழுப்புகிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2017 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கேட்டது சரி. அதற்குண்டான பதிலைச் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு) அதற்கு பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

(ஆ) குடியரசு தின விழா அழைப்பிதழ் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த குடியரசு தின விழாவிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்முறையாக கொடியேற்றியிருக்கிறார்கள். ஆனால், இந்த விழாவிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எங்களது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் வழங்கப்படவில்லை. (குறுக்கீடுகள்)*

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைப்பற்றி என்னவென்று விசாரிக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி***,** *அது சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியில்லை. அது அரசு சார்பாக நடந்திருக்கிறது. அதுகுறித்து என்னவென்று விசாரித்து சொல்கிறேன். (குறுக்கீடுகள்) விசாரித்து சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. இராமசாமி அவர்கள் வைத்த கோரிக்கைக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் கேட்ட கேள்விக்கும், "யாருக்கெல்லாம் அழைப்பிதழ் அனுப்பிவைக்கப்படவில்லையோ, அதுகுறித்து என்னவென்று விசாரித்து, நான் உரிய நடவடிக்கை எடுக்கிறேன்" என்பதை என் பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார். (குறுக்கீடு) அதுகுறித்துதான் நான் பதில் சொல்லிவிட்டேனே, பிறகு என்ன? (குறுக்கீடு) பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *நான் என்னுடைய ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இதேபோல, அங்கீகரிக்கப்பட்ட*